# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம்

---

*[1990 ஒக்ரோபர் மாதம் 11 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990 ஒக்ரோபர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

**1990 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க. மதுவரி (திருத்தச்) சட்டம்**

[1990, ஒக்ரோபர் மாதம் 11 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 33/89
2023

**மதுவரிக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **52 ஆம் அத்தியாயத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியில் "திருத்தங்களின் அட்டவணைகளையும் விதித்தல்" என்ற சொற்களுக்குப் பதிலாக "திருத்தங்களின் அட்டவணைகளையும் விதித்தல்;" என்ற சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(ட) பிரிவு 58அ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட வெகுமதி நிதியத்திலிருந்து மதுவரி அலுவலர்களுக்கும் தகவல் தருபவர்களுக்கும் வெகுமதிகளைக் கொடுப்பதற்கான திட்டமொன்றை விதித்துரைத்தல்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) "ஐம்பது ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவை" என்ற சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) "ஆறு வாரங்களுக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டு மாதங்களுக்கு" என்ற சொற்களை இடுவதன்மூலமும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது, அப்பிரிவிலுள்ள "எவராயினும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல்" என்ற சொற்களிலிருந்து "அவர் ஆளாதல் வேண்டும்" என்ற சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"எவராயினும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன்—

(1) பந்தி (அ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ) அல்லது (ஏ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு தவறின் விடயத்தில் ஓர் ஆண்டு காலத்திற்கு நீடிக்கக்கூடிய இருவகையில் ஒருவகை மறியல் தண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு நீடிக்கக்கூடிய

குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் அவர் ஆளாதல் வேண்டும், அத்துடன் இதனகத்துத் தண்டிக்கப்பட்ட செயல் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னர் தொடர்ந்தும் செய்யப்பட்டால், அவ்வாறு தவறு தொடர்ந்து செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் பத்தாயிரம் ரூபா மேலதிகக் குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ii) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு தவறின் விடயத்தில் ஆறு மாதங்களுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலப்பகுதிக்கு இருவகையில் ஒருவகை மறியற்றண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு நீடிக்கக்கூடிய குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் அவர் ஆளாதல் வேண்டும்; அத்துடன் இதனகத்துத் தண்டிக்கப்பட்ட செயல் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னர் தொடர்ந்தும் செய்யப்பட்டால், அவ்வாறு தவறு தொடர்ந்து செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்கும் பதினையாயிரம் ரூபா மேலதிகக் குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) "ஆறுமாத" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஓர் ஆண்டு" என்ற சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) "ஆயிரம் ரூபாவுக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஒரு இலட்சம் ரூபாவுக்கு" என்ற சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவானது, அப்பிரிவிலுள்ள "இருநூறு ரூபாவுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவானது, அப்பிரிவிலுள்ள "நூறு ரூபாவுக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாகப் "பத்தாயிரம் ரூபாவுக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவானது, அப்பிரிவிலுள்ள "ஆயிரம் ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐந்து இலட்சம் ரூபாவை" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 58அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 58அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"மதுவரி வெகுமதி நிதியம்.

58அ. (1) (இப்பிரிவில் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மதுவரி வெகுமதி நிதியமென அழைக்கப்பட வேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அது மதுவரி ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இருத்தலும் வேண்டும்.

(2) இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட தவறுகளை இணக்குவதில் அல்லது இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை, அனுமதிப் பத்திரமொன்றை அல்லது அனுமதிச் சீட்டொன்றை இல்லாதாக்குவதற்கு அல்லது இடைநிறுத்துவதற்குப் பதிலாக, 56 ஆம் பிரிவின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) முப்பத்திரண்டாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் விதித்துரைக்கப்பட்ட திட்டத்திற்கிணங்க, மதுவரி அலுவலர்களுக்கும் தகவல் தருபவர்களுக்கும் வெகுமதியாக வழங்கப்படுவதற்குத் தேவைப்படும் எல்லாக் கொடுப்பனவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.".

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.